## “நிலைபெறுதகு விவசாய நிகழ்ச்சித்திட்டம்- Farming System Sustainability Programme (FSSP) - விவசாயக் கடன் திட்டம்

2026 கிருஷி திட்டங்களுக்கு அணுகலை உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட “நிலைபெறுதகு விவசாய நிகழ்ச்சித்திட்டம் (FSSP) - விவசாயக் கடன் திட்டம்” 2026 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

இந்த கடன் திட்டம் விவசாய பெறுமான சங்கிலி முறைமை தொடர்பான கருத் திட்டங்களுக்கு கடன்களை வழங்கும் அதேவேளையில் தேசிய பொருளாதாரத்தில் விரிவான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கருத்திட்டங்களில் அதிக கவனம் செலுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. பயனாளிகளை தேர்ந்தெடுப்பதில், விவசாய பெறுமான சங்கிலி முறைமை தொடர்பான கருத்திட்டங்களின் நிலைத்தன்மை, உற்பத்தித்திறன், சந்தைப்படுத்தல் திறன், ஏற்றுமதி திறன், சுற்றாடல் பாதிப்பை குறைத்தல், நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டும்

வி கருத்திட்டத் துறை/பிரிவு

வசாயப் பயிர்கள் (தேயிலை, தேங்காய், இறப்பர் பயிர்ச்செய்கை தவிர), விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல், உணவு பதப்படுத்துதல், விவசாயத்தில் பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், ஏற்றுமதி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர விவசாயத் தொழில்கள் மற்றும் வணிகங்கள், விவசாயம் சார்ந்த தொழில்கள், விவசாய பெறுமதி சேர்த்தல் தொழில்கள் (தேயிலை, தேங்காய், இறப்பர் உட்பட), கால்நடை வளர்ப்பு, உள்நாட்டு மீன்வளம் (நன்னீர்), விவசாய மைய புதுமையான பொருட்கள், இத்துறை சார்ந்த வர்த்தக வாகனங்கள் மற்றும் தரைவழி (land) வாகனங்கள் ஆகியவற்றின் கொள்வனவு, விவசாய மூலப்பொருட்கள் (விவசாய உற்பத்திதகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படும் மூலப்பொருட்கள் தொடர்பான வணிகங்கள். மேலும் இது பிரதான வணிகமாக இருத்தில் வேண்டும்), விவசாய வசதியேற்பாட்டாளர்கள் மற்றும் வாங்குபவர்கள், விவசாய சுற்றுலா வணிகங்கள், மலர் வளர்ப்பு, காளான் வளர்ப்பு உட்பட விவசாயப் பெறுமான சங்கிலி தொடர்பான எந்தவொரு துறையிலும் தற்போதுள்ள விவசாய வணிகங்களை அபிவிருத்தி செய்யவும், புதிய வணிகங்களைத் தொடகங்வும், தொழிற்பாட்டு மூலதனம், முதலீடு மற்றும் ஒருங்கிணைந்த (தொழிற்பாட்டு மூலதனம் மற்றும் முதலீடு இணைந்து) கடன் பெறும் நோக்கில் விண்ணப்பிக்கலாம்.

கருத்திட்டத்தை செயற்படுத்தும் வங்கி - மக்கள் வங்கி, இலங்கை வங்கி (BOC), பிராந்திய அபிவிருத்தி வங்கி (RDB), கொமஷல் வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி (HNB), DFCC வங்கி, கார்கில்ஸ்

வங்கி, சனச அபிவிருத்தி வங்கி (SDB), சேலான் வங்கி, சம்பத் வங்கி, நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி, பான் ஆசியா வங்கி (Pan Asia Bank), ஸ்டேட் மோர்ட்கேஜ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் வங்கி (SMIB), யூனியன் வங்கி (Union Bank)

பயனாளிகளின் வயதுத் தொகுதி - 18 முதல் 65 வயதுக்குட்பட்டவர்கள்

வட்டி விகிதம் - வருடாந்தம் 5%

உச்ச கடன் வரையறை - I. தனிநபர் கடனின் ஆகக்கூடிய வரையறை ரூ. 05 மில்லியன்

II. தொகை கடனுக்கான அபிவிருத்திக் கருத்திட்டத்தினதும் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கையினதும் அடிப்படையில் இது வேறுபடும் (ஒரு பயனாளிக்கு ஆகக்கூடியது ரூ.500,000.00.)

பயனாளிகளின் வயதுத் தொகுதி - 18 முதல் 65 வயதுக்குட்பட்டவர்கள்

கடனை செலுத்தும் காலம் - I. தனிநபர் கடன் – தொழிற்படு மூலதன கடனிற்கு சலுகை காலம் உட்பட ஆகக்கூடியது 03 வருடங்கள். முதலீட்டு கடன் மற்றும் ஒருங்கிணைந்த கடனிற்கு சலுகை காலம் உட்பட ஆகக்கூடியது 05 வருடங்கள்.

II. தொகைக் கடன் - சலுகை காலம் உட்பட ஆகக்கூடியது 03 வருடங்கள்.

சலுகை காலம் - தனிநபர் கடன் - கருத்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப அதிகபட்சம் 12 மாதங்கள்.

தொகைக் கடன் - கருத்திட்டத்தின் தன்மைக்கு ஏற்ப அதிகபட்சம் 06 மாதங்கள்

விளக்கங்கள் - பணிப்பாளர் (விவசாய வணிகம்) – 011 2034300 (நீட்டிப்பு எண்-4323/4511).

பதிவிறக்கவும்

கடன் விண்ணப்பங்கள்

தனிநபர் கடனுக்கான விண்ணப்பம் 01 - (ரூ. 1,000,000.00 இற்குக் குறைந்த)

தனிநபர் கடனுக்கான விண்ணப்பம் 02 - (ரூ.1,000,000.00 முதல் ரூ.5,000,000.00 வரை)

தொகைக் கடனுக்கான விண்ணப்பம் 03 -

வணிகத் திட்ட முன்மொழிவுகள்

வணிகத் திட்டம் 01 (ரூ.500,000.00 இற்குக் குறைய)

வணிகத் திட்டம் 02 (ரூ.500,000.00 முதல் ரூ.2,500,000.00 வரை)

வணிகத் திட்டம் 03 (ரூ. 2,500,000.00 இற்கு அதிகம் - ரூ.5,000,000.00 வரை)

(மொத்தக் கடன்கள் - தனிநபர் திட்டம்)

கடன் விண்ணப்பதாரருக்கான அறிவுறுத்தல்களைப் பதிவிறக்கவும்